ஒரு தடுமாற்றமாக இருக்கிறது, பல பெண்கள் உடலில் துளையிட்டு ஆராயும் நடைமுறை ஒன்றை செய்யப் போவதற்கு முன் SAFE பரிசோதனை போன்ற NIPT-ஐ பெற விரும்புகிறார்கள்.

NIPT ஒரு தகுதிகாண் பரிசோதனை என்பதை நினைவில் கொள்ள வேண்டியது முக்கியமாகும், அதாவது எப்போதாவது தவறான நேர்மறை முடிவுகளும், தவறான எதிர்மறை முடிவுகளும் ஏற்படலாம். உடலில் துளையிட்டு ஆராயும் நடைமுறையுடன் தொடர்புடைய கருக்கலைவு இடருடன் ஒப்பிடும்போது நோயறிதலைப் பற்றி உறுதியாக இருக்க வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொள்வது நல்லது. எப்படியாவது தங்கள் கர்ப்பத்தைத் தொடர விரும்பும் சில பெண்கள், உடலில் துளையிட்டு ஆராய்கின்ற பரிசோதித்தல் இல்லாமல் தொடர்வதில் மகிழ்ச்சியாக இருக்கலாம். கருச்சிதைவைக் கருத்தில் கொண்டவர்களைப் பொறுத்தவரை, SAFE பரிசோதனை முடிவை உறுதிப்படுத்த உடலில் துளையிட்டு ஆராய்கின்ற பரிசோதனை ஒன்று தேவைப்படும்.

உங்களிடம் உள்ள ஏதேனும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், இந்த நேரத்தில் உங்களுக்கு ஆதரவளிக்கவும் உங்கள் பேறுகாலச் செவிலியர் மற்றும் / அல்லது மகப்பேறியல் நிபுணர் தயாராக இருப்பார்.

## மேலும் தகவலுக்கு நான் யாரை தொடர்பு கொள்ளலாம்?

SAFE பரிசோதனை பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து உங்களுக்கான பேறுகாலச் செவிலியரை அல்லது ஆலோசகர் மகப்பேறியல் நிபுணரை தொடர்பு கொள்க. நேரடியாகத் தொடர்பு கொள்ள, தயவுசெய்து மின்னஞ்சல் அனுப்புக: theSAFEtest@nhs.net

SAFE பரிசோதனை குறித்த மேலதிகத் தகவலுக்கு அல்லது உங்கள் அருகிலுள்ள வழங்குநரைக் கண்டறிவதற்குத் தயவுசெய்து பார்வையிடுக: **www.theSAFEtest.co.uk**

## நோயாளி ஆலோசனை மற்றும் தொடர்புச் சேவை (PALS)

நீங்கள் பெற்றுள்ள எங்கள் சேவைகள் அல்லது நலம்பேணல் பற்றி உங்களிடம் கருத்துகள் அல்லது கவலைகள் இருக்கும்போது உங்கள் உள்ளூர் PALS அலுவலகம் உங்களுக்கு நிகழ்விடத்திலேயே ஆலோசனையையும் தகவலையும் வழங்க முடியும்.

## பிற பயனுள்ள அமைப்புகள்

**NHS வலைத்தளம்:**
www.nhs.uk

**டவுன் சின்ட்ரோம் சங்கம்**
www.downs-syndrome.org.uk

**டிரைசோமி 13/18 (SOFT)-க்கான ஆதரவு அமைப்பு, UK**
www.soft.org.uk

**பிரசவத்திற்கு முந்தைய முடிவுகள் மற்றும் விருப்பத்தேர்வுகள் (ARC)**
www.arc-uk.org

**டவுன் சின்ட்ரோம் பற்றி நேர்மறை**
www.positiveaboutdownsyndrome.co.uk

## செயின்ட் ஜார்ஜ் பல்கலைக்கழக மருத்துவமனைகள் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் பற்றி

செயின்ட் ஜார்ஜ் பல்கலைக்கழக மருத்துவமனைகள் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டின் மகப்பேறு பிரிவானது ஒரு பிராந்திய மற்றும் மூன்றாம்நிலை பரிந்துரை பிரிவு ஆகும், இது நாட்டில் உள்ள பாதுகாப்பான பிரிவுகளுள் ஒன்று என்று தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 5,000 க்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பிரசவிக்கும் இந்தப் பிரிவு ஆனது மனிதனிடம் மருத்துவப் பலாபலன் அறியும் விதிவிலக்கான வருவிளைவுகளையும், மிக உயர்ந்த வெளிப்புற அங்கீகாரங்களையும் பெற்றுள்ளது மற்றும் லண்டனில் மிக உயர்ந்த 'பேறுகாலச் செவிலியர்: பிறப்பு' விகிதங்களைக் கொண்டுள்ளது. இந்தப் பிரிவில் ஆலோசகர் மற்றும் பேறுகால மருத்துவப் பணியியல் தலைமையிலான பேறுகால நலம்பேணல் மற்றும் நான்கு வாரத்திற்குட்பட்ட குழந்தைக்குரிய தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் ஒரு சிறப்பு நலம்பேணல் குழந்தைப் பிரிவு உள்ளிட்ட அதிநவீன சாதனங்கள் ஆகியவை உள்ளன.

செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் உள்ள வயிற்றில் உள்ள குழந்தைக்கான மருந்துப் பிரிவு ஒரு முன்னணி மூன்றாம்நிலை பரிந்துரை மையம் ஆகும் மற்றும் நோக்கத்திற்கென பிரத்யேகமாகக் கட்டப்பட்ட ஒரு பிரிவுக்குள் அமைந்துள்ள ஆராய்ச்சி மையம் ஆகும். இது, வழமையான மதிப்பீடு முதற்கொண்டு வயிற்றில் உள்ள குழந்தைக்கான அறுவை சிகிச்சை (கருப்பையில் அறுவை சிகிச்சை) உள்ளிட்ட உடலில் துளையிட்டு ஆராயும் நடைமுறைகள் வரையிலான நலம்பேணலின் அனைத்து அம்சங்களின் அதிநவீன கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. இந்தப் பிரிவு வழமையாக, தென்மேற்கு லண்டன் பிராந்தியத்தில் உள்ள 10 மாவட்ட பொது மருத்துவமனைகளில் இருந்து பரிந்துரைகளை ஏற்றுக்கொள்கிறது. இது, பிரசவத்திற்கு முந்தைய நலம்பேணலுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 35,000 பெண்களை அனுமதிப்பதை உள்ளடக்கியதாகும். சிக்கலான வயிற்றில் உள்ள குழந்தைக்கான அறுவை சிகிச்சை நடைமுறைகள், UK மற்றும் ஐரோப்பாவில் உள்ள பிற மருத்துவமனைகளில் இருந்து தாய்மைய நலம்பேணல் ஆகியவற்றுக்காக மேலதிகமாகப் பிராந்திய பரிந்துரைகள் பெறப்படுகின்றன. இந்தப் பிரிவானது, கர்ப்பத்தில் அதிக இடர் கொண்ட நலம்பேணலின் மருத்துவ மற்றும் ஆதரவு நிர்வாகத்தில் சர்வதேச நிபுணத்துவத்தை அறிந்துக் கொண்டுள்ளது.

---

SAFE பரிசோதனை என்பது Yourgene.Health plc-இல் இருந்து ஒரு CE-அடையாளக்குறியிடப்பட்ட, உடலுக்குள் நடத்தப்படும் நோயறியும் பரிசோதனை ஆகும். Yourgene என்பது இங்கிலாந்தைச் சேர்ந்த மாலிக்யூலார் டயாக்னாஸ்டிக்ஸ் நிறுவனம் ஆகும், இது, அதிகளவில் கர்ப்பிணிப் பெண்களுக்கு, முதலாவது ஒழுங்குபடுத்தப்பட்ட NIPT பரிசோதனையைக் கொண்டு வருவதில், UK சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் ஒன்றை உருவாக்க, செயின்ட் ஜார்ஜ் பல்கலைக்கழக NHS மருத்துவமனைகள் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டுடன் பங்காண்மையில் பணியாற்றி வருகிறது.

*Yourgene Health plc இன் பதிவுபெற்ற வர்த்தக முத்திரையான - IONA® பரிசோதனை மூலம் இயக்கப்படுகிறது*

Document Control: 03/20

Ref no: 111454

NHS
St George's University Hospitals
NHS Foundation Trust

the SAFE test
St George's Antenatal Fetal Evaluation

# பிரசவத்திற்கு முன் உடலில் துளையிடாமல் ஆராயும் பரிசோதனை (NIPT) - SAFE பரிசோதனை

Information for NHS Patients

Tamil

## NIPT என்றால் என்ன?

பிரசவத்திற்கு முன் உடலில் துளையிடாமல் ஆராயும் பரிசோதனை (NIPT) என்பது ஒரு தகுதிகாண் பரிசோதனையாகும், இது, கர்ப்பத்திற்கு ஒரு குறிப்பிட்ட குரோமோசோம் சார்ந்த நிலைமை ஏற்படுவதற்கான அதிக வாய்ப்பு உள்ளதா என்பதை மதிப்பீடு செய்ய அதிநவீன டி.என்.ஏ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

## SAFE பரிசோதனை என்றால் என்ன?

செயின்ட் ஜார்ஜின் பிரசவத்திற்கு முன் வயிற்றில் உள்ள குழந்தைக்கான மதிப்பீடு (SAFE) பரிசோதனை என்பது UK தேசிய தகுதிச்சோதனைக் குழு (UKNSC) பரிந்துரைகளுக்கு இணக்கமாக டவுனின், எட்வர்ட்ஸின் மற்றும் படாவின் நோய்க்குறிகளை மட்டுமே தகுதிகாண்கின்ற ஒரு NIPT பரிசோதனை ஆகும். இந்தப் பரிசோதனையானது, தாயின் இரத்தத்தின் ஒரு சிறிய மாதிரிக்கூறை எடுப்பதன் மூலம் செய்யப்படுகிறது, பின்னர் இந்த மாதிரிக்கூறு செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் உள்ள NHS ஆய்வகத்திற்கு மதிப்பீட்டிற்காக அனுப்பப்படுகிறது. முடிவுகள் பொதுவாக மாதிரிக்கூறு பற்றுச்சீட்டைப் பெற்றதில் இருந்து 7 காலண்டர் நாட்களுக்குள் கிடைக்கும்.

## SAFE பரிசோதனை எப்படி நடத்தப்படுகிறது?

**கர்ப்பக் காலத்தில் தொப்புள் கொடியானது செல் ஃப்ரீ DNA-ஐ தாயின் இரத்த ஓட்டத்தில் சிந்துகிறது. இதன் விளைவாக, தாயின் இரத்தத்தில் தொப்புள் கொடியின் மற்றும் தாயின் cfDNA கலந்திருக்கும். இரத்தத்தில் உள்ள cfDNA-ஐ மதிப்பீடு செய்து, அந்த மதிப்பீட்டுடன் தாய்க்கு டிரைசோமி (தாயின் வயது அல்லது NHS-க்குள் வழங்கப்படும் ஒருங்கிணைந்த சோதனை முடிவுகள்) ஏற்படுவதற்கான பின்னணி வாய்ப்புடன் சேர்த்து கணக்கிட்டு, குழந்தைக்கு டவுன் சின்ட்ரோம் போன்ற குரோமோசோம் நிலைமை ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளதா இல்லையா என்பதைக் கணிக்க நிகழ்வாய்ப்பு விகிதம் பெறப்படுகிறது.**




## SAFE பரிசோதனை ஏன் செய்யப்படுகிறது?

தேசிய தகுதிச்சோதனைப் பாதையின் ஒரு பகுதியாக, கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில் பெண்களுக்கு 'ஒருங்கிணைந்த பரிசோதனை' வழங்கப்படுகிறது. இது, குரோமோசோம் சார்ந்த அல்லது கட்டமைப்பு சார்ந்த முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பை மதிப்பிடுவதற்கு அல்ட்ராசவுண்டு கண்டறிதல்களுடன் ஹார்மோன் சார்ந்த இரத்த அளவுகளை மதிப்பீடு செய்கிறது. இந்த முறையால் கண்டறியக்கூடிய நிலைமைகளின் வரம்பு ஆனது SAFE பரிசோதனையால் அடையாளம் கண்டறியப்படும் நிலைமைகளின் எண்ணிக்கையை விடப் பரந்ததாக இருந்தாலும், SAFE பரிசோதனையானது டவுனின், படாவின் மற்றும் எட்வர்ட்ஸின் நோய்க்குறிக்கான அதிகக் கண்டறிதல் விகிதங்களைக் கொண்டுள்ளது.

மேலதிகமாக, 'ஒருங்கிணைந்த பரிசோதனை' முடிவு கிடைத்தால், அதிகத் தனிப்பயனாக்கப்பட்ட முடிவை வழங்க SAFE பரிசோதனையால் இதை ஒருங்கிணைக்க முடியும்.

## டவுன் சின்ட்ரோம் என்றால் என்ன?

டவுன் சின்ட்ரோம் (அல்லது டிரைசோமி 21) உள்ளவர்களுக்குக் குரோமோசோம் 21 இன் கூடுதல் நகல் ஒன்று உள்ளது (பொதுவாக எல்லாருக்கும் இரண்டு குரோமோசோம் நகல்கள் இருக்கும், ஆனால் இவர்களுக்கு மூன்று இருக்கும்). இங்கிலாந்தில் பிறந்த ஒவ்வொரு 1000 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு டவுன் சின்ட்ரோம் இருக்கும். மேலும், இங்கிலாந்தில் 40,000-க்கும் மேற்பட்டோர் இந்த நோய்க்குறி நிலைமையுடன் உள்ளார்கள். டவுன் சின்ட்ரோமுடன் எவருக்கும் குழந்தை பிறக்கக்கூடும். வயதான தாய்மார்களுக்கு இத்தகைய நோய்க்குறியுடன் குழந்தை பிறக்கும் வாய்ப்பு அதிகரித்துக் காணப்பட்டாலும், அதிக எண்ணிக்கையில் இளம்வயது பெண்களுக்கும் டவுன் சின்ட்ரோமுடன் குழந்தைகள் பிறக்கிறார்கள்.

டவுன் சின்ட்ரோம் என்பது வாழ்நாள் முழுவதும் பொதுவாக ஓரளவு கற்றல் குறைபாடுகளுடன் தொடர்புடையது. டவுன் சின்ட்ரோம் உள்ளவர்களிடத்தில் சில சுகாதாரநல நிலைமைகள் மிகவும் பொதுவானவை, இருப்பினும் பெரும்பாலான தொடர்புடைய மருத்துவப் பிரச்சினைகளுக்குச் சிகிச்சையளிக்க முடியும். டவுன் சின்ட்ரோம் உச்சபட்ச அளவில் மாறுபடுகிறது மற்றும் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை அறிவதற்கான சாத்தியமில்லை. சில பெரியவர்களுக்கு நீண்ட கால ஆதரவு தேவைப்படும், இருப்பினும் பல இளைஞர்கள் நடப்புச்சூழல் பள்ளிகளில் பயின்று, மாறுபட்ட அளவிலான உதவிகளுடன் நியாயமான அளவுக்குச் சுதந்திரமான வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

## எல்லா நிலைமைகளுக்கும் SAFE பரிசோதனையால் தகுதிகாண முடியுமா?

முடியாது - டவுன் சின்ட்ரோம் மிகவும் பொதுவாக தகுதி காணப்படும் நிலைமை ஆகும். அதே போல, எட்வர்ட்ஸ் நோய்க்குறி (டிரைசோமி 18) மற்றும் படாவின் நோய்க்குறி (டிரைசோமி 13) என அழைக்கப்படும் இரண்டு அரிதான மற்றும் மிகவும் தீவிரமான நிலைமைகளுக்கும் தகுதி காணப்படுகிறது.

## எட்வர்ட்ஸின் மற்றும் படாவின் நோய்க்குறி என்றால் என்ன?

எட்வர்ட்ஸின் மற்றும் படாவின் நோய்க்குறி என்பன வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் நிலைமைகள் ஆகும் மற்றும் பலவிதமான மேம்பாடு சார்ந்த மற்றும் சுகாதாரநலம் சார்ந்த சிரமங்களை ஏற்படுத்தக்கூடியவை ஆகும், அவற்றில் சில மிகவும் தீவிரமானவை ஆகும். எட்வர்ட்ஸின் அல்லது படாவின் நோய்க்குறியால் பாதிக்கப்பட்ட கர்ப்பங்களில் 70% கருக்கலைவதில் அல்லது குழந்தை இறந்து பிறப்பதில் முடிவடையும். எட்வர்ட்ஸின் அல்லது படாவின் நோய்க்குறியின் பகுதியளவு வடிவங்கள் குழந்தையின் மீது குறைந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

## யாருக்கு SAFE பரிசோதனை நடத்த முடியும்?

IVF, முட்டை நன்கொடையாளர் அல்லது மாற்றாள் கர்ப்பங்கள் உள்ளிட்ட அனைத்து ஒற்றை மற்றும் இரட்டை கர்ப்பங்களுக்கும் கர்ப்பத்தின் 10 வாரங்களில் இருந்து இந்தப் பரிசோதனை பொருத்தமானது. ஒரே மாதிரியாக இல்லாத மற்றும் 'மறையும் இரட்டை நோய்க்குறி'களுக்கு, சோதனை உணர்திறன் குறைக்கப்படுகிறது.

இந்தச் சோதனையானது புற்றுநோயுள்ள, குரோமோசோம் சார்ந்த அல்லது மரபணு சார்ந்த நிலைமையுள்ள (டவுன் சின்ட்ரோம் உட்பட) தாய்க்கு, பல கர்ப்பங்களுக்கு (இரட்டையர்களை விட அதிகமாக) பொருத்தமானதல்ல. மேலும் இந்தச் சோதனையானது, கடந்த 3 மாதங்களில் இரத்தம் ஏற்றப்பட்டுள்ள, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, நோயெதிர்ப்புச் சிகிச்சை அல்லது ஸ்டெம் செல் சிகிச்சை பெற்றுள்ள தாய்மார்களுக்கும் பொருத்தமற்றது.

சந்தைப்படுத்தலுக்குப் பிந்தைய கண்காணிப்பின் அடிப்படையில். ஒற்றையின் கர்ப்பங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை.

## SAFE பரிசோதனை எவ்வளவு பாதுகாப்பானது?

குறைந்த வாய்ப்பு: உங்கள் கர்ப்பம் டிரைசோமி 21, 18 அல்லது 13 ஆல் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு, எனவே உங்கள் குழந்தைக்கு டவுனின், எட்வர்ட்ஸின் அல்லது படாவின் நோய்க்குறி இருப்பது மிகவும் குறைவு.

அதிக வாய்ப்பு: உங்கள் குழந்தைக்கு டிரைசோமி 21, 18 அல்லது 13 இருப்பதற்கான அதிக வாய்ப்பு உள்ளது என்பதையும், இதன் விளைவாக அந்த வாய்ப்பை, உடலில் துளையிட்டு ஆராய்கின்ற நோயறியும் பரிசோதனையால் உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் குறிக்கிறது.

பயனில்லா முடிவு: மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நேர்வுகளில் (200 ல் 1), பரிசோதனைகள் பல்வேறு காரணங்களுக்காக ஒரு முடிவைத் தராது. இந்த நேர்வில் மருத்துவக் குழு உங்களுக்குக் கிடைக்கக்கூடிய விருப்பத்தேர்வுகளைப் பற்றி உங்களுடன் கலந்துரையாடும்.

## எனக்கு "அதிக வாய்ப்பு" முடிவு கிடைத்தால் என்ன ஆகும்?

SAFE பரிசோதனை ஒரு குரோமோசோம் சார்ந்த நிலைமை ஏற்படுவதற்கானஅதிக வாய்ப்பைக் காட்டினால், உங்களுக்குப் பனிக்குடத்துளையிடல் அல்லது கருவின் வெளியுறை விரலிகள் (கோரியானிக் வில்லி) மாதிரிக்கூறு எடுத்தல் (CVS) போன்ற உடலில் துளையிட்டு ஆராய்கின்ற நோயறியும் பரிசோதனை செய்யப்படும். இந்தப் பரிசோதனைகள் உங்கள் குழந்தைக்கு டவுனின், எட்வர்ட்ஸின் அல்லது படாவின் நோய்க்குறி உள்ளதா என்பதற்கு ஒரு திட்டவட்டமான 'ஆம்' அல்லது 'இல்லை' முடிவைக் கொடுக்கும். இரண்டு நடைமுறைகளும் குழந்தையைச் சுற்றியுள்ள பனிக்குட நீரின் ஒரு சிறிய மாதிரிக்கூறை (பனிக்குடத்துளையிடல்) அல்லது தொப்புள் கொடியில் இருந்து செல்களின் (CVS) ஒரு சிறிய மாதிரிக்கூறைச் சேகரிக்க ஒரு நுண்ணிய ஊசியைப் பயன்படுத்துகின்றன. இந்த உடலில் துளையிட்டு ஆராயும் நடைமுறைகள் ஒரு நிச்சயமான நோயறிதலைக் கொடுத்தாலும் அவை கருக்கலைவதற்கான ஒரு சிறிய இடரைக் கொண்டுள்ளன. கருக்கலைவுக்கான வாய்ப்பு பெரும்பாலும் பெற்றோருக்கு